
மாலை முரசு

பக்கங்கள் 18+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 02 வெள்ளிக்கிழமை 16.05.2025 | அதிர்வு 286

## உருக்குலைந்த நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(எஸ்.கீதபொன்கலன்)



திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரோதய நகர் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்து

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழரசுக்கு ஆதரவளிக்க வேண்டுமெனில் 4 சபைகளில் தவிசாளர் பதவி வேண்டும்!

## ‘சங்கு’ கூட்டணி நிபந்தனை என்று சுமந்திரன் தகவல்

(எஸ்.ரகுதீஸ்)

இலங்கை தமிழரசுக் கட்சி கூடுதலான உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூராட்சி சபைகளில் அந்தக் கட்சி ஆட்சியமைக்க ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) உட்பட 4 சபைகளில் தவிசாளர் பதவியைக் கோரியுள்ளது.

02




காணி சுவீகரிப்பு வர்த்தமானியை வாபஸ் பெறாவிடின்

## உலகையே உலுக்குமளவுக்கு போராட்டத்தை நடத்துவோம்!

### அநுர அரசுக்குச் சுமந்திரன் எச்சரிக்கை

(எஸ்.ரகுதீஸ்)

“வடக்கில் மக்களின் காணி சுவீகரிப்புக்கான வர்த்தமானி மீளப்பெறப்படுவதை அரசு மே 28 ஆம் திகதிக்கு முன் உறுதி செய்ய வேண்டும். தவறினால் மறுநாள் 29 ஆம் திகதி தொடக்கம் நாட்டை மட்டுமல்ல உலகையே உலுக்குமளவுக்கு போராட்டம் முன்னெடுக்கப்படும். இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுடன் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி

02

# ஈழத்தில் நடந்தது உண்மையில் இனப்படுகொலைதான்! அதைச் சிங்களப் பேரினவாதிகள் மறைக்கவே முடியாது!!



## தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு

“ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலை மேற்கொள்ளப்படவில்லை என்று கூறும் சிங்களப் பேரினவாதிகள், உலகத்தின் கண்களையும், மனச்சாட்சியையும் மறைக்கப் பார்க்கின்றார்கள். உண்மையில் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை தான். அதை இந்தச் சிங்களப் பேரினவாதிகள் மறைக்க முடியாது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். நெடுந்தீவில் நேற்று நடைபெற்ற குமுதினிப் படுகொலையின்

03

## பகிடிவதையால் பல்கலை மாணவன் உயிர்மாய்ப்பு:

# 10 மாணவர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(எஸ்.ஜினோதன்)

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளாகி கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 மாணவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

10 மாணவர்களும் இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தமிழரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்படி தகவலைக் கூறியுள்ளார்.

இதன்போது சுமந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் நாங்கள் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்துக்குப் பிறகு ஒருஅறிவிப்பைவெளியிட்டிருக்கின்றோம். அதாவது தமிழ்க் கட்சிகளோடு, முஸ்லிம் கட்சிகளோடு நாங்கள் பொது அளவிலேயே ஓர் இணக்கப்பாட்டை எடுத்திருக்கின்கிறோம். எந்தெந்தச் சபைகளில் எந்தக் கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருக்கின்றதோ அந்தச் சபைகளிலே அந்தக் கட்சி அப்படியாக நிர்வாகத்தை அமைப்பதற்கான ஆதரவை மற்றைய கட்சிகள் வழங்க வேண்டும் என்பது எங்களது கோரிக்கை. அது பெரும்பாலும் சாதகமாக மற்ற கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளுடனும் நாங்கள் இணக்கப்பாடுடன் இருக்கின்றோம்.

ஆனால், ஒவ்வெரு சபை சபையாகப் பேசி சரியான தீர்மானங்களுக்கு இன்றும் வரவில்லை. ஆனால், பொதுவான ஒரு நிலைப்பாடாக இது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

அதைப்போல் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. இன்றைக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் நான்கு பேர் நல்லூரில் எனது வீட்டுக்கு வந்திருந்தனர். எமது கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானமும், நானும் அவர்களுடன் உரையாடினோம்.

சித்தார்த்தன், செல்வம் அடைக்கா நாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியில் தலைவர் வேந்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பொது இணக்கப்பாட்டுடன் சேர்ந்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்னொரு கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர். அநேகமான சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆகவே, தவிசாளர் நியமனத்தைப் பொறுத்தவரை இந்த உடன்பாட்டுக்கு அமைய இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத்தான் தவிசாளர் பதவி செல்ல வேண்டும். கணிசமான ஆசனங்களை மற்றக் கட்சி கொண்டிருந்தால் அந்தக் கட்சிக்குப் பிரதி தவிசாளர் பதவி வழங்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய யோசனை.

ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்று எங்களைச் சந்தித்தபோது இதற்கு மேலதிகமாக தங்களுக்கு தவிசாளர் பதவியைக் கொடுக்குமாறு ஒரு விண்ணப்பத்தை முன்வைத்தனர். மிக அதிகமான சபைகளில் தமிழரசுக் கட்சிக்குத்தான் ஆட்சி அமைகின்ற சூழ்நிலையில், நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமக்கு நான்கு சபைகளில் தவிசாளர் பதவியை விட்டுத்தருமாறு கேட்டுள்ளார்கள்.

குறிப்பாக, மானிப்பாய் பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய நமக்கு சபைகளில் தவிசாளர் பதவியை அவர்கள் கோருகின்றனர்.

இந்த விடயத்தில் எங்களுடைய கட்சியின் தீர்மானம் ஒன்று இருக்கின்ற காரணத்தால் அதற்கு விதிவிலக்காக நாங்கள் நடப்பதாக இருந்தால், திரும்பவும் கட்சி தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

அதுமட்டுமன்றி இந்த பொதுவான இணக்கப்பாட்டுக்கு மாறாக செயற்படுவதாக இருந்தால் , அந்தந்த பிரதேசத்தில் இருக்கின்ற எமது கட்சி செயற்பாட்டாளர்களுடனும் நாங்கள் கலந்துரையாட வேண்டும்.

ஆகையினாலே இங்கே இது சாத்தியமா? அல்லது இது சாத்தியமா? என்கின்ற விடயங்களை நாங்கள் ஆராய்ந்து அவர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லி இருக்கின்றோம்." – என்றார்.

### உலகையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கின் கரையோரப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டும், பல தடைவைகள் இடம்பெயர்ந்த காரணத்தாலும் தமது காணிகளுக்கான ஆவணங்களை இழந்துள்ளனர். சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந் நிலையில் அவர்களது காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பழமையான இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படக்கூடாது. இந்த வர்த்தமானி பிரசுரம் உடனடியாக மீளப் பெறவேண்டும் என்று நாங்கள் கூறி இருக்கின்றோம். அப்படி மே மாதம் 28 ஆம் திகதிக்கிடையில் இது மீளப் பெறாவிட்டால், நாங்கள் பாரியதொரு போராட்டத்தை அரசுக்கு எதிராக நடத்துவோம் என்று ஏற்கனவே அறிவித்திருக்கின்றோம். மே மாதம் 29 ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும். இது நான் ஏற்கனவே கூறியதைப் போல் ஒரு கட்சி சார்ந்த நடவடிக்கை என்று எவரும் கருதக் கூடாது. இது எங்களுடைய இருப்பின் மிக முக்கிய கூறாகிய நிலத்தைப் பற்றிய விடயம்.

நிலம் இருந்தால்தான் இனம் தொடர்ந்து இருக்கலாம். ஆகையினால் இது சகலராலும் ஆதரிக்கப்பட வேண்டிய போராட்டம். சகல அரசியல் கட்சிகளுக்கும் நான் அன்பாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள், இதில் இணைந்துகொள்ளுங்கள். இது எனது கட்சி நடத்துகின்ற போராட்டமாகக் கருதாமல் நாங்கள் அனைவரும் இணைந்து செய்கின்ற போராட்டமாக இருக்க வேண்டும். பொது அமைப்புக்கள், மக்கள், விசேடமாக பாதிக்கப்பட்ட மக்கள் இதில் இணைந்துகொள்ள வேண்டும். ஆகவே, அரசுக்குக் கொடுக்கப்பட்ட காலக்கெடு இந்த மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

ஆகவே, எதிர்வரும் 29 ஆம் திகதி போராட்டம் நடத்துவதற்கான ஆயத்தங்களை நாங்கள் செய்கின்றோம். இது இந்த நாட்டை மட்டுமல்ல உலகத்தையே உலுக்கக்கூடிய ஒரு போராட்டமாக இருக்கவேண்டும். ஏனென்றால் இங்கே அரசு இப்ப செய்ய நினைத்திருக்கின்றது மிக மிகப் பாரதூரமான விடயம்.

ஆகையினாலே இது எவ்வளவு பாரதூரமானது என்பதை உணர்ந்து சகலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் நான் அன்பாகக் கோரிக்கை விடுக்கின்றேன்." – என்றார்.




### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிப்பு

**(ந.லோகதயாளன்)**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவேந்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



## ஈழத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“குமுதினிப் படகில், குருநகர் கடலில், கொக்கட்டிச்சோலையில், சத்துருக்கொண்டானில், வாகரையில், நவாலியில், நாகர் கோயிலில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை கொத்துக்கொத்தாக எங்களைக் கொன்றொழித்துவிட்டு, ஈழத்தில் இனப் படுகொலை நடைபெறவே இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், நாமல் ராஜபக்ஷவும், அலி சப்ரியும் தெரிவித்துள்ள கருத்துக்கள் உலகத்தின் மனச்சாட்சியை உலுக் கத்தக்க, சிங்கள வல்லாதிக்க வெளிப் பாட்டுக்குரியவை. அத்தகைய கருத் துகளை முன்வைத்தோர்க்கு எதிராக நான் எனது வன்மையான கண்டனங் களைப் பதிவு செய்கின்றேன்.

இத்தகைய இனவாதம் கொப்பளிக்கும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு மத் தியில், ஈழத்தில் நடந்தது இனப்படு கொலைதான் என்பதற்கான சர்வதேச சாட்சியமாக, பிரம்டனில் இனப்படுகொலை நினைவுத்தூபியை நிறுவிய கனேடியப் பிரதமர் மாண்புமிகு மார்க் ஹனி, பிரம்டன் நகர மேயர் கௌரவ பற்றிக் பிரவுண் ஆகியோரோடு, இதற்குக் காரணமான அனைவருக்கும் எமது நன்றிகள்.

காலங்காலமாக எங்கள் மீது புரியப் பட்ட இனப்படுகொலையின் கறைபடிந்த வரலாற்றின் நாளான குமுதினிப் படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தலில், வலிசுமந்த நெடுந்தீவு மண்ணிலிருந்து மேற்படி இருவருக்கும் நன்றிகளைப் பகிரங்கமாகத் தெரிவிக் கின்றேன்.” – என்றார்.

## உருக்குலைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருக்குலைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் ஒன்று இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

ஜின்னா நகர் பகுதியைச் சேர்ந்த எட்வேட் கோமர் (வயது–70) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் அணிந்திருந்த சேட் மற்றும் சாரம் ஆகியவற்றை வைத்து இது தனது தந்தை என மகள் அடையாளம் காட்டியுள்ளார் எனவும், அந்த நபர் காணாமல்போயுள்ளார் என்று அவரது குடும்பத்தினரால் சுமார் 10 நாட்களுக்கு முன்னர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டிருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 100 கோடி ரூபா இழப்பீடு கோரி

# சரவணபவனுக்கு வக்கீல் நோட்டீஸ்

(ந.லோகதயாளன்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் 100 கோடி ரூபா இழப்பீடு கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி உப தலைவர் சண்முகநாதன் ஜெயந்தன் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சி சார்பில் வட்டுக் கோட்டைத் தொகுதியில் வாக்குகளைப் பெறுவதற்காக மதுபானம் வழங்கப் பட்டது என்று 2025-05-12 அன்று பொதுவெளியில் சரவணபவன் பொய் யாக உரையாற்றியமையால் ஏற்பட்ட இழப்புக்குப் பரிகாரமாக 100 கோடி ரூபா வழங்க வேண்டும் எனக் கோரப் பட்டுள்ளது. இதனை 14 தினங்களுக்குள் வழங் கத் தவறினால் இதற்கான வட்டிப் பணம் மற்றும் வழக்குச் செலவுடன் வழங்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று 2025-05-14 அன்று சட்டத் தரணி கீர்த்தனா கமலச்சந்திரன் ஊடாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

KEERTHANA KAMALACHANDRAN

ATTORNEY-AT-LAW & NOTARY PUBLIC

KADDUVAN ROAD,
MALLAKAM
JAFFNA,
Sri lanka.
Email :keerthjeevi@gmail.com
077 366 2469

14.05.2025

திரு.ஈஸ்வரபாதம் சரவணபவன்
இல:105, இராச வீதி,
கோப்பாய்.

பதிவுத்தபால் மூலமாக

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளை சார்பாக தொல்புரம், சுழிபுரத்தைச் சேர்ந்த அக்கிளையின் உப தலைவர், திரு.சண்முகநாதன் ஜெயந்தன் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இக்கேள்விக் கடிதம் எழுதப்படுகிறது;

1. கடந்த 2025 மே மாதம் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் YMCA மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் கூட்டத்தில் தாங்கள் பேசிய போது கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலை ஒட்டி வட்டுக்கோட்டையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் வாக்காளர்களுக்கு சாராயம் விநியோகித்ததாக கூறியுள்ளீர்கள்.
2. இப்படி தாங்கள் கூறியது ஊடகங்கள் மூலம் பரவலாகப் பகிரப்பட்டுள்ளது.
3. மேற்சொன்ன தங்களது குற்றச்சாட்டு, சமூகஊடகங்கள் மூலமாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பகிரப்பட்டுள்ளது.
4. இக் குற்றச்சாட்டு முற்றுமுழுதாக பொய்யானதும், எவ்வித ஆதாரமற்றதும், வேண்டுமென்றே எமக்கு களங்கம் ஏற்படுத்தும் தீய நோக்கோடு செய்யப்பட்டதாகும்.
5. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இந்தநாட்டில் அதிஉயர்ந்த மதிப்பைப் பெற்ற அப்பழுக்கற்ற ஓர் அரசியல் கட்சி என்பதோடு அக்கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தாங்கள் விலக்கப்பட்டதன் காரணமாக இவ்விடயத்தில் மிகுந்த காழ்ப்புணர்வோடு செயல்பட்டுள்ளீர்கள்.
6. தங்களது மேற்சொன்ன பொய்யான குற்றச்சாட்டு காரணமாக தமிழ் மக்களுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நற்பெயருக்கும் களங்கமும், குறிப்பாக அதன் வட்டுக்கோட்டைக் கிளைக்கும் எனது கட்சிகாரருக்கும் ஈடு செய்யமுடியாததுமான நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.
7. மேற்சொன்ன இழப்புக்கள் ஈடு செய்யமுடியாதவையானாலும் அவற்றிற்கு ஓரளவு பரிகாரமாக எனது கட்சிக்காரர் 100 கோடி ரூபாவுக்கு மட்டுப்படுத்துகிறார்.
8. இக்கேள்விக் கடிதம் கிடைத்து 14 நாட்களுக்குள் ரூபா 100 கோடி எனது கட்சிக்காரருக்கு நீங்கள் செலுத்தவேண்டும். தவறினால் இத்தொகையை வட்டியோடும் வழக்குச் செலவோடும் பெற்றுக்கொள்ள வழக்குத் தாக்கல் செய்யுமாறு எனது கட்சிக்காரர் எனக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

சட்டத்தரணி

K.Keerthana LL.B (Hons)
Attorney-at-Law,Notary Public
Commissioner for oaths &
Regd.Company Secretary
Chunnakam
Mobile. 077 366 2469.




# அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு!

(பாறுக் ஷிஹான்)

சுனாமிப் பேரலை தாக்கி 20 வருடங்கள் கடந்துவிட்டன. இலங்கையில் பாதிப்புற்ற அனைத்து பிரதேசங்களிலும் பாதிப்புற்றோர்களுக்கு நியாயமான அடிப்படையில் இழப்புகள் ஈடுசெய்யப்பட்டுவிட்டன. குறிப்பாகச் சுனாமி பாதுகாப்பு எல்லைக்கு உட்பட்டவர்களுக்கு அந்தந்தப் பிரதேசங்களில் பாதுகாப்பான இடங்களில் குடியிருப்புக்கான வீடமைப்புக்கள் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன.ஆனால் அக்கரைப்பற்று பிரதேசத்தில் மாத்திரம் நுரைச்சோலை அரச காணியில் அமைக்கப்பட்ட வீடுகளை சுனாமியால் பாதிப்புற்று வீடுகள் முழுமையாக சேதமடைந்த மக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

இவ்வாறு அக்கரைப்பற்றில் சுனாமியால் பாதிப்புற்றோர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் இன்று கல்முனை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிப்புற்றோர் சங்கத் தலைவர் ஐ.எல்.ஏ. குத்தூஸ் கூறுகையில்,

15 வருடங்களுக்கு முன்னர் வீடமைப்பு அமைச்சராக இருந்த திருமதி பேரியல் அஷ்ரஃப்பின் அயராத முயற்சியில், எங்களுக்காக சவுதி நாட்டு நிதியில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட வீடுகளை வழங்க ஆயத்தமானபோது, சுயநல அரசியல் இலாபங்களுக்காகவும் அக்கரைப்பற்று மக்களுக்கு இந்த வீடுகளை வழங்கக்கூடாது எனத் திட்டமிட்டுத் தடுக்கப்பட்டது.

நடந்த அநியாயங்கள் அனைத்தையும் கண்முன்னே கண்டு அனுபவித்த நான் உட்பட பலர் அவற்றுக்குச் சாட்சி. இதனை மேலும் தடை செய்ய சிலரால் உச்சநீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பு இருப்பதால் வீடுகளை வழங்க முடியாதுள்ளது என மாவட்ட அரச அதிபர் முதல் உயர்மட்ட அதிகாரிகளும், மாறி மாறி ஆட்சி செய்த ஆட்சியாளர்களும் கூறிவருகின்றனர்.

புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று முதன் முதலில் கூறியது, நுரைச்சோலை வீடுகள் பாதிப்புற்ற மக்களுக்கு உடனடியாக வழங்கப்படும் என்று. அவ்வாறு கூறி ஆறு மாதங்கள் தாண்டிவிட்டன. அவர்களும் அதைச் செய்யவில்லை. இதற்குத் தீர்வை யார்தான் வழங்குவது.– என்றார்.

இந்தப் பணிகளில் பாதிப்புற்ற மக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் மனித எழுச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் கே. நிஹால் அஹமட் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வருகை தந்திருந்தார்.

அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் காணி, வீட்டு உரிமைகளுக்காக நீண்ட காலமாக போராடிவரும், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியில் தீர்வு வேண்டிய போராட்டத்தில் இணைந்திருப்பவர்களில் இந்தப் பிரச்சினையில் பாதிப்புற்றோர்களும் உள்ளனர். இந்த உரிமைக்காக நீண்ட காலமாகப் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

உண்மையில் இலங்கையில் தேசிய காணிக் கொள்கை ஒன்று இல்லை. நாட்டு பிரஜைகளுக்கு நிலப் பிரச்சினைகள் இந்தளவு அதிகரிக்க பிரதானமான காரணிகளில் அதுவும் ஒன்றாகும். தேசிய காணிக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்று நீண்ட காலமாக பல சிபாரிசுகளை நாம் அரசுக்கு வழங்கி வந்துள்ளோம்.

கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி கல்முனைப் பிராந்தியத்துக்குக் களவிஜயம் மேற்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி கிஹாண் குணதிலக தலைமையிலான குழுவைச் சந்தித்த எமது பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

15 ஆண்டுகளுக்கும் அதிகமாக நடைமுறைப்படுத்த முடியாது உள்ள தீர்ப்பு ஒன்று தொடர்பில் உச்ச நீதிமன்றத்துக்குப் பரிந்துரை ஒன்றை எழுதிக் கோரும் இயலுமை மனித உரிமைகள் ஆணைக்குழுவுகக்கு உண்டு. எனவே பாதிப்புற்ற மக்களுடைய முறைப்பாடு இருக்குமிடத்து ஆணைக்குழுவால் குறித்த நடவடிக்கையை எடுக்கமுடியும்.

அந்த அடிப்படையில், சுனாமியால் பாதிப்புற்று இதுவரை வீடுகள் கிடைக்காதவர்களும், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் சுனாமி வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியலில் உள்ளவர்களில் 78 பேர் ஒப்பமிட்ட முறைப்பாட்டை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய அலுவலகத்தில் இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் பாரமளித்துள்ளோம்.

இந்த முறைப்பாடு தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆணைக்குழு விரைவாக எடுக்க வேண்டும் என்பதையும் பணிவாக வேண்டிக் கொள்கின்றோம்.– எனக் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் பதில் என்ன?

கனடாவின் பிரம்டன் நகரில் தமிழின அழிப்பு நினைவகம், நிர்மாணிக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி கனடாவின் ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டத்தின் பிரகாரம் இம்மாதம் 12 - 18 ஆம் திகதி வரையான ஒரு வார காலம் தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரமாக அங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவை இலங்கை அரசை சீற்றத்துக்குள் ஆழ்த்தச் செய்திருக்கின்றனவாம்.

இதனால் நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரங்களும் அற்ற நிலையில் அதனை அடிப்படையாகக்கொண்ட நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் தொடர்பில் கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தினார். அதுமாத்திரமன்றி இவ்வாறான நடவடிக்கைகள் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கை அரசின் முயற்சிகளைப் பெரிதும் பலவீனப்படுத்தி சிக்கலாக்குவதாகவும் அவர் விசனம் வெளியிட்டார்.

பல்லாயிரம் தமிழர்களை ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்த கொடூரத்தை ஆதாரமற்றவை என வெறும் பேச்சளவில் கூறி மூடி மறைத்து விட முடியாது.

இலங்கையில் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நியமித்த தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழு, இலங்கைப் படைகளால் பல்லாயிரம் தமிழரகள் கொல்லப்பட்டமையையும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் தாராளமாக இழைக்கப்பட்டமையையும் முழு அளவிலான தனது விசாரணைகளின் பின்னர் தனது இறுதி அறிக்கையில் உறுதி செய்திருக்கின்றது.

இந்தக் குற்றங்களும், கொடூரங்களும், மனித உரிமை மீறல்களும் இனவழிப்பு நடவடிக்கைகள்தாம் என்று பிரகடனப்படுத்துவதற்கு சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணையை ஒன்று அவசியமாகும் என்பது உண்மைதான்.

“தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசால் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதாகக் கண்டறியப்படவில்லை எனஇலங்கைஅரசுஉண்மையிலேயே நம்புமாக இருந்தால், இவ்விடயத்தை ஒட்டிய சர்வதேசசுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வதற்கும், இலங்கை அரசு எவ்வித குற்றத்திலும் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கும் இலங்கை அரசு எதற்காகப் பின்னடிக்கின்றது? ஏன் அஞ்சுகின்றது?”- என இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

நியாயமான - வெளிப்படையான - தீர்க்கமான - கேள்வி. இலங்கையின் பேரினவாத அரசின் பதில் என்ன?



# கஞ்சியை ஓர் அடையாளமாகக் கொண்டு அழிக்கப்பட்டோருக்கு நீதி வேண்டுகிறோம்!

## சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ்

(வாலகிருஸ்ணா)

இஸ்ரேலியர் வரலாற்றில் புளிப்பற்ற அப்பமும் கசப்புக் கீரையும் அவர்களுடைய அடையாளமாக மாறி அடையாளத்தின் மூலமாக அவர்கள் நீதி கேட்டு மீண்டும் ஒரு சமூகமாக மீண்டெழுந்தார்கள். நாங்களும் இந்த கஞ்சியை ஒரு அடையாளமாக மாற்றி பாதிக்கப்பட்டவர்கள் அழிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி இந்த நினைவேந்தலை மேற்கொண்டு இந்த அடையாளத்தின் ஊடாக நீதி கேட்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இன அழிப்பு வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வுகள் இன்று (16) மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றுவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன அழிப்பு வாரத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தின் தலைவி திருமதி அ. அமலநாயகி, ஜேசுசபை துறவி அருட்தந்தை ஜோசப்மேரி , அருட்தந்தையர்கள், அருட்பணியினர் கலந்து கொண்டனர்.

மானுட வாழ்வின் வரலாற்று பெருந்துயரை நினைவு கூருவோம், பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தில் பங்கெடுத்து அவர்களுடன் இருப்போம், இன அழிப்புக்கு நீதிகோருவோம், மானுடத்துக்கு எதிரான அழிவுகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவோம் போன்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது இறுதி யுத்தததின்போது படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவு கூரப்பட்டு ஆத்ம சாந்தி பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டதை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தால் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை சொல்வோம் துண்டுப் பிரசுரங்களும் இதன் போது பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வெளிநாட்டவரும் பங்குகொண்டனர். அவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அருட்தந்தை ஜெகதாஸ்,

இந்த வாரமானது தமிழின அழிப்பு வாரமாக உலகத் தமிழர்களால் நினைவு கூறப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு உலகில் நடத்தப்பட்ட மிகப் பெரிய இன அழிப்பாக இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய இன அழிப்பாக முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

16 ஆண்டுகள் கடந்து இன அழிப்புக்கு நீதி வேண்டிய மக்களாக இன்றைய நாளில் மட்டக்களப்பு கிறிஸ்தவ ஒன்றியத்தினரால் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கும் நிகழ்வு தற்போது நிறைவு கூறப்பட்டு கொண்டிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இன அழிப்பு செய்யப்பட்டபோது அந்த மக்களுக்கு எதுவித உணவும் இருக்கவில்லை. எதுவிதமான அடிப்படை வசதிகளும் இருக்கவில்லை. லட்சக் கணக்கான மக்கள் முள்ளிவாய்க்கால் பகுதியிலே முடக்கப்பட்டிருந்தபோது அங்கே கிடைக்கப்பெற்ற தண்ணீரையும் அரிசியையும் கொண்டு மக்களுடைய பசியை ஆற்றுவதற்காகவும் உயிரை பாதுகாப்பதற்காகவும் கஞ்சி காய்ச்சப்பட்டது.

அந்த கஞ்சிகளுக்காக நீண்ட வரிசையிலே மக்கள் பசியோடும் வாட்டத்தோடும் காத்திருந்தார்கள். அந்த கஞ்சியை ஒரு வேளையாவது குடித்து தங்களது உயிரை தக்க வைப்பதற்காக சிறுவர்கள், கர்ப்பிணிகள், முதியோர்கள் எல்லாரும் கஞ்சி காய்ச்சப்படுகின்ற அந்த பானைக்கு முன்பாக வரிசையாக நின்று போது ராணுவத்தினரால் ஏவப்பட்ட ஏவுகணைகளும் வெடிகுண்டுகளும் அவர்களுடைய உயிரைக் குடித்தது. எத்தனையோ தடவைகள் கஞ்சிப் பானைகள் இரத்தப் பானைகளாக மாறிக் கஞ்சிக்காக நின்ற மக்கள் கொன்றொழிக்கப்பட்ட துயரம் நடந்தேறியது.

சர்வதேசத்திடம் இந்த அழிப்புகளுக்கான நீதி கேட்கும் அதே நேரத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பேரவலத்தினுடைய ஒரு அடையாளமாக இருக்கின்றது. எந்த கஞ்சியை குடிக்க விடாமல் கொன்றொழித்தார்களோ அந்தக் கஞ்சியை நாங்கள் நினைவு கூர்ந்து அதனை அடையாளமாக மாற்றி அந்த பெரும் துயரை நினைவு கூறுவது மாத்திரமல்ல இவ்வாறான பெரும் துயர்கள் இந்த இன அழிப்புகள் இந்த உலகத்தில் நடைபெறக்கூடாது.

இன்று காசாவில் இன அழிப்பு நடைபெறுகின்றது அந்த மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள். ஆகவே நாங்கள் ஒரு இன அழிப்பை சந்தித்தவர்கள் இன அழிப்பில் இருந்து எஞ்சிய இனமாக நாங்கள் இருக்கின்றோம். ஆகவே அழிக்கப்பட்ட இனத்தினுடைய பிரதிநிதிகளாக இருந்து இந்த அடையாளத்தை நினைவு கூருவதோடு நாங்கள் இன அழிப்புக்கான நீதியைக் கேட்டு நிற்கின்றோம்.– என்றார்.




# அக்கரைப்பற்று ஸ்கோபியன்ஸ் அணி சம்பியன்!

(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று கிரிக்கெட் சபையின் அனுசரனையுடன், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தால் இந்தப் பிரதேசத்தில் உள்ள சிறந்த கடின பந்து விளையாட்டு அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட கடின பந்து சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று ஸ்கோபியன்ஸ் விளையாட்டு கழகம் சம்பியனாது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு ஸ்கோபியன்ஸ் மற்றும் நோ நேம் அணிகள் தெரிவாகி, முதலில் துடுப்பெடுத்தாடிய நோ நேம் அணி 17 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கோபி யன்ஸ் அணி வெற்றி இலக்கை 13.5 ஓவர்களில் எட்டி சம்பியனாகத் தெரிவானது.



# சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 118 ஆவது ஆண்டு நினைவு விழா!

(வடமராட்சி நிருபர்)

மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 118 ஆவது ஆண்டு நினைவு விழா நாளை (17) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

சதாவதானி சனசமூக நிலையத் தலைவர் ந.நிரஞ்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதியுமான தி.வேல்நம்பி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கௌரவ விருந்தினர்களாக இலங்கை திணைக்கள சிரேஷ்ட பணிப்பாளர் க.நா.சண்முகநாதன், சதாவதானிக்கள், கூட்டுறவுச் சங்கத் தலைவர் சோ.கங்காதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விழாவை முன்னிட்டு வடமராட்சி பிரதேசத்தை சேர்ந்த முதலாம் ஆண்டு தொடக்கம் 12 ஆம் ஆண்டு வரையான மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, மனனம், பண்ணிசை, பொது அறிவு , திறந்த கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய பணிக்காக இந்த வருடத்துக்கான விருது கலாநிதி மனோன்மணி சண்முகநாதனுக்கு வழங்கப்படவுள்ளது.






# கல்முனையில் கணித அறிவு மேம்படுத்தல்; ஜப்பானிய நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் !

(வி.ரி.சகாதேவராஜா)

'தாராள உள்ளங்கள்' அறக்கட்டளை ஏற்பாட்டில் 'சுரல' எனும் கணினி மயப் படுத்தப்பட்ட கணித அறிவு மேம்படுத்தல் ஜப்பானிய நிகழ்ச்சித் திட்டம் அக்ஷன் யுனிற் லங்காவுடன் இணைந்து கல் முனை அலுவலகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது,

அறக்கட்டளையின் தலைவர் ஜெ.ஜெயப்பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஜெ.அதிசயராஜ் கலந்து கொண்டார்.

சிறப்பதிதிகளாக கல்முனை பிரதி கல்விப் பணிப்பாளரும் காரைதீவு கல்முனை தமிழ் பிரிவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஆ. சஞ் ஜீவன், முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் கே.விமலநாதன், கல்முனை எச்.என்.பி. முகாமையாளர் என்.அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதியாக அக்ஷன் யுனிற் லங்கா கிழக்கு மாகாண தலைமை நிர்வாக அதிகாரி கே.கஜேந்திரன் கலந்து கொண்டார்.

தாராள உள்ளங்கள் அறக் கட்டளையின் நிர்வாக உறுப்பினர்கள், அக்ஷன் யுனிற் லங்கா நிர்வாக உறுப் பினர்கள் 'சுரல' திட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அக்ஷன் யுனிற் லங்காவின் கல்முனை அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது.

# யாழ். பல்கலைக்கழக சமூக ஏற்பாட்டில் மன்னாரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!







(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

யாழ். பல்கலைக்கழக சமூகம் ஏற் பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்ற வியாழக்கிழமை (15) மதியம் மன்னார் நகர பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

எம்மவர்களின் வலி நிறைந்த வர லாற்றை அடுத்த சந்ததியினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் கடத்தும் கடமை பல்கலைக்கழக மாண வர்களாகிய தமது பொறுப்பு என்று இதன் போது அவர்கள் தெரிவித் துள்ளனர்.

இதன்போது குறித்த பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி மக்களுக்கு வழங்கி வைக்கப் பட்டது.

மே-12 ஆம் திகதி தொடக்கம் முள் ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை யாழ். பல்கலைக்கழக சமூகம் அனுஷ்டித்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சியை நேரடியாக சென்று காய்ச்சி மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று வியாழக் கிழமை 4 ஆவது நாளாக மன்னாரில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கப்பட்டது.

# கதிர்காம ஆடிவேல் விழா உத்தியோகபூர்வ அறிவிப்பு!

## ஜூன் 26 ஆரம்பம் ஜூலை 11 தீர்த்தம்

(வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா திகதி உத்தியோக பூர்வமாக ருகுணு மகா கதிர்காம தேவாலய நிர்வாகத்தால் அறிவிக் கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான கதிர் காமத்தின் வருடாந்த அசல பெரஹெரா ஆடிவேல் திருவிழா, அசல் பெரஹறா ஜூன் 26 ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 07 ஆம் திகதி தீ மிதிப்பு வைப வம் இடம்பெற்று, ஜூலை 10 ஆம் திகதி மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை 11 ஆம் திகதி காலை மாணிக்கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் அதாவது தீர்த் தத்துடன் நிறைவடையும்.

மேற்கூறப்பட்ட சடங்குகள் தினங்கள் பௌத்த பாரம்பரிய முறைப்படி தீர்மா னிக்கப்பட்டது.

சைவ முறை அல்லது இந்துக் கோயில் என்ற ரீதியில் நோக்கினால் கதிர்காம ஆடிவேல் விழா உற்சவம் ஆடி மாதத்தில் வரவேண்டும். ஆனால் இங்கு இவ் வருட உற்சவம் ஆனி மாதத் தில் வருகிறது.



எனவே ஆடிவேல் விழா என்று அழைப்பது பொருத்தமாக இருக்குமா என்பது வினாவாகும். அப்படி எனின் ஆனிவேல் விழா என்று அழைக்க லாமா? என்பதும் சைவர்களின் அடுத்த வினாவாகும்.

இதேவேளை யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகிய ஜெயா வேல்சாமி தலைமையிலான மிக நீண்ட 59 நாள் பாதயாத்திரை நேற்று 16 ஆவது நாள் திருமலை மாவட்டத்தை புல்மோட்டையை அடைந் துள்ளது.

ஜூன் மாதம் 26 ஆம் திகதி கதிர் காமத்தை சென்றடையும் என்று தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித் தார்.

# மாணவி அம்ஷியின் மரணத்துக்கு சரியான நீதி பெற்றுத் தர வேண்டும்!

## சிவில் சமூக செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன்

(பாறுக் ஷிஹான்)

கொழும்பு, கொட்டஞ்சேனை பிரதேசத்தின் தொடர் மாடிக் குடியிருப்பு ஒன்றின் 6 ஆவது மாடியிலிருந்து விழுந்து உயிரை மாய்த்துக் கொண்ட அம்ஷிகா எனும் மாணவியினுடைய மரணத்துக்குக் காரணமான கணித பாட ஆசிரியர் தண்டிக்கப்பட வேண்டும் என்று சிவில் சமூக செயற்பாட்டாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோச கருமான தாமோதரம் பிரதீபன் குறிப் பிட்டுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் கல்முனை நற்பிட்டி முனையில் அமைந்துள்ள அம்பாறை மாவட்ட பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றை அளித்த பின்னர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரி வித்துள்ளதாவது,

கொழும்பு கொட்டஞ்சேனை பிரதே சத்தின் தொடர் மாடிக் குடியிருப்பு ஒன்றின் 6 ஆவது மாடியில் இருந்து



விழுந்து தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொண்ட அம்ஷிகா எனும் மாணவியினுடைய மரணத்துக்குக் காரணமான கணித பாட ஆசிரியர் தண்டிக்கப்பட வேண்டும்.

தனக்கு நேர்ந்த அவலம் பற்றி பாடசாலை நிர்வாகத்திடம் முறையிட்ட போதும் அது பாடசாலையின் நற் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் எனக் கருதித் தட்டிக் கழித்து மாணவியை மன உழைச்சலுக்குள்ளாக்கிய அந்தப் பாடசாலை நிர்வாகமும் கூட இந்த மாணவியின் மரணத்துக்கு வகை கூற வேண்டும்.

இந்தப் பாடசாலையை விட்டுச் சென்ற மற்றப் பாடசாலையிலும் இந்த மாணவியை அவமானப்படுத்திய மற்றும் மன உளைச்சலுக்காளாக்கிய ஆசிரியர்களும் வகை கூற வேண்டும்.

இந்த மாணவியின் விடயத்தை முறையாக விசாரணை செய்து குற்றவாளிகளைக் கைது செய்யாது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளாது கண்துடைப்புக்காகக் கைது செய்து பிணையில் செல்ல அனுமதித்தவர் களும் வகை கூற வேண்டும்.

அத்தோடு இந்த மாணவி சென்ற தனியார் வகுப்பின் உரிமையாளரும் கூட இந்த மாணவி தற்கொலை செய்யுமளவுக்குத் தூண்டுதல்களில் ஈடுபட்டிருக்கிறார். அதனால் இவரும் இதற்கு வகை கூற வேண்டும். இவ்வாறு தொடர்ச்சியாக இந்த மாணவி துஷ்பிர யோகங்களுக்கும் பாலியல் துன்பங் களுக்கும் மன உளைச்சலுக்கும் உள் ளாகித் தனக்கு நீதி கிடைக்காது எனும்

தொடர்ச்சி▼

# மாணவி...

தொடர்ச்சி▲

நிலையிலும் மன உளைச்சலின் உச்ச நிலையில் தன் வீட்டுத் தொடர் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

தனக்கு நீதி கிடைக்க வேண்டும், தன்னைப்போல் இனி யாரும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தன் உயிரைத் தந்து நீதி கேட்டிருக்கிறாள் இந்த மாணவி. ஆனால் இந்த மாணவிக்கான நீதி இதுவரை கிடைக்காத நிலையில் இந்த மாணவியின் பெற்றோரும் இன்னும் பலரும் வீதியில் இறங்கி போராடி வரும் நிலையில் இந்த மாணவி மனநோய் தொடர்பான சிகிச்சைகளைப் பெற்று வந்த ஒரு மன நோயாளி என்பது போல நாடாளுமன்றத்தில் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் உரையாற்றியிருக்கின்றார். இவரும் இதற்கான வகை கூற வேண்டும்.

இந்த மாணவியனுடைய இறப்புக்குச் சரியான விசாரணை நடத்தப்பட்டு இந்த இறப்புக்குக் காரணமான அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும்.

இனியும் எந்த மாணவிக்கும் இவ்வாறு ஒரு அநீதி இழைக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் இவ்வாறான குற்றங்களுக்கான உரிய நல்ல சட்டங்கள் இயற்றப்படவும் மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவும் மனித உரிமை சார்ந்து செயல்படுகின்ற நான் இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடளித்திருக்கிறேன்.

இந்த மாணவியினுடைய மரணத்துக்கு நீதி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் இனியும் இந்த மாணவி போன்று வேறு யாரும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் தொடர்ந்தும் நாம் செயற்படுவோம்.- என்றார்.



### உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர்

# சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு உலகில் முதல் கருங்கல் சிலை!

## மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தில் நாளை திறப்பு விழா

(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு உலகில் 15 அடி உயர முதல் கருங்கல் சிலை நாளை (17) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் பூரண ஏற்பாட்டில், மட்டக் களப்பு கல்லடிப்பாலத்தில், இந்திய மாமல்லபுரத்தில் செதுக்கிய கருங்கல்லாலான சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவப் படுகிறது.

மட்டக்களப்பு, கல்லடி, உப்போடை, இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மாதவானந்தஜீ முன்னிலையில் சுப வேளையில் கடந்த ஜனவரியில் அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

அடிகளாரின் சிலையானது தனி ஒரு கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் மாமல்லபுரத்தில் திறமை வாய்ந்த தமிழ் நாட்டு சிற்பிகளால் செதுக்கப்பட்டது.

அடிகளாரின் சிலை அமைப்பு செயற்குழுவின் தலைவரான மட்டக் களப்பின் பிரபல வர்த்தகரான தேசபந்து முத்துக்குமார் செல்வராஜா தலைமையில் நடைபெற்றன. நாளை அவர் தலைமையில் சிலைதிறப்பு விழா நடைபெறுகிறது.

நாளை விழா மட்டக்களப்பு நூற்றாண்டு விழாச் சபைத்தலைவர் கே. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ் சிலையைத் திறந்து வைக்கவுள்ளார்.






# தேசியமும் உணர்வும் பணத்துக்காக விலைபோனமை கவலை அளிக்கிறது!

## தமிழரசுக் கட்சியின் அம்பாறை எம்.பி. கோடீஸ்வரன் கவலை



**(வி.ரி. சகாதேவராஜா)**

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்களது தேசியம் உணர்வு என்பது சில இடங்களில் பணத்துக்கு விலை போனமை கவலைக் குரியது. இருப்பினும் இது தற்காலிகமானதே. எதிர்காலத்தில் சிறந்த கட்டமைப்பை உருவாக்கி தேசியத்தை வளர்ப்போம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பொத்துவில் தொகுதி கட்சி அமைப்பாளருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அம்பாறை மாவட்டத்தில் ஆறு சபைகளில் நாம் போட்டியிட்டோம். இதில், காரைதீவு, ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் எமது கட்சிக்கு கணிசமான வெற்றி கிடைத்துள்ளது. அங்கு சபைகளை அமைக்க காத்திருக்கிறோம். ஆனால், திருக்கோவில் பகுதியில் இம்முறை தேசியம் விலை போய் இருக்கின்றது. கோடிக் கணக்கில் பணம் கொட்டப்பட்டு மக்களின் மனம் மாற்றப்பட்டிருக்கிறது. இவை கவலை என்றாலும் தற்காலிகமானதே.

நாம் எங்களை சுய விமர்சனம் செய்ய வேண்டிய காலத்தில் இருக்கின்றோம். எமது அம்பாறை மாவட்ட கட்சிக் கிளைகள் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்த முடிவுகள் எடுத்துக்காட்டுகிறது.

கட்சி பிரமுகர்கள் தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்ட செயற்பாடுகளும் வாக்காளர் இடையே அவநம்பிக்கை ஏற்படுத்தியது என்பதையும் மறுக்க முடியாது.

எது எப்படி இருப்பினும் இன்னும் ஓரிரு தினங்களில் எமது கட்சி தலைமைப் பீடம் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தரும். அந்தச் சமயம் இந்த சகல விடயங்களும் பேசப்பட இருக்கின்றன. ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் புதிய பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பாகவும் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்க இருக்கின்றோம்.

இலங்கை தமிழரசுக் கட்சி என்றும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் என்பதை இந்த வேளையிலும் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தனை கோடிக்கணக்கான பணம், அபிவிருத்தி என்ற மாயை போன்ற பல அழுத்தங்களுக்கு மத்தியிலும் தேசியம் உணர்வுக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையிலே ஊழல் அற்ற தூய்மையான கட்சி என்றால் அல்லது தூய்மையான ஆட்சி என்றால் அது இலங்கை தமிழரசுக் கட்சி ஒன்றுதான். ஏதோ ஒரு மாற்றம் வேண்டும் என்று இலங்கை மக்கள் நாடாளுமன்ற தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும் சிவப்புக் கட்சிக்கு வாக்களித்தார்கள்.

ஏதோ தமிழ் மக்கள் இரண்டு தேர்தல்களிலும் தங்களுக்கு ஆணை தந்துள்ளனர் என்று கத்தினார்கள்.

அந்த பிரேமையை தமிழ் மக்கள் இந்த தேர்தலில் தகர்க்க வேண்டும் என்று கோரினோம். உலகத்துக்கு ஒரு செய்தியை சரியாக நாம் சொல்ல வேண்டும் என்று கோரினோம். அதாவது நாம் என்றும் எமது அரசியல் உரிமைகளுக்காக பயணிக்கும் தமிழரசுக் கட்சியோடு தான் நிற்கின்றோம் என்ற செய்தி.

அந்தச் செய்தியை இந்த ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எமது தமிழ் மக்கள் உரத்துச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் என்றும் எம்மோடுதான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள்.– என்றார்.









# பிரகடனப்படுத்திய பலூசிஸ்தான்!

✦ ஐங்கரன் விக்கினேஸ்வரா.

எங்கள் விடுதலைக்கு உங்கள் உதவி தேவை என்று இந்தியாவுக்குக் கோரிக்கை வைத்துள்ளனர் பலூசிஸ்தான் மக்கள்.

பாகிஸ்தானின் ஆதிக்கம் மற்றும் அதன் ராணுவ கெடுபிடிகளில் இருந்து தங்கள் நிலத்தை விடுவிக்க இந்தியாவின் ஆதரவு தேவை என்று கூறி கோரிக்கை விடுத்துள்ளனர்.

பலூசிஸ்தான் மாகாண மக்கள், தங்களை இந்தியாவுடன் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளமை புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த பலூசிஸ்தான் போராட்ட குழுவை சேர்ந்த "அட்டா பலோச்" அமைப்பினர் வெளியிட்ட செய்தியில், பலூசிஸ்தான் விடுதலைக்கு இந்தியா குரல் எழுப்ப வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்கு உங்களின் ஆதரவு தேவை என வலியுறுத்திக் கோரியுள்ளனர்.

**காஷ்மீர தாக்குதல் எதிரொலி**

தெற்கு காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22.04.25 அன்று நடந்த கொடூர தாக்குதலில் சுமார் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட இந்த கொடிய தாக்குதலுக்கு பாகிஸ்தானை தளமாகக் கொண்ட அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) பொறுப்பேற்றது.

இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நீடித்து வருகிறது. இந்தியா ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த நிலையில் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுவதால், இந்தியா பலூசிஸ்தான் விவகாரத்தில் தலையிட்டு வருகிறது. பலூஸ்தினிய மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் இந்திய அரசு காஸ்மீரிகளின் போராட்டத்தை அடக்கி வைத்துள்ளது.

பலூஸ்தினிய தீவிரவாதிகளுக்கு உதவி செய்யும் இந்திய அரசு, காஸ்மீரிய தீவிரவாதிகளுக்கு உதவி செய்யும் பாகிஸ்தான் அரசுடன் பல ஆண்டுகளாக பகைமையை நீடித்து வருவதும் அறிந்ததே.

அத்துடன் அரசுகள் மக்கள் மீது போர்களைத் திணிக்கின்றன. இதனால் புதிய நாடுகள் பிறக்கின்றன என்பதும் யதார்த்தமே. அண்மையில் முதன்முறையாக பாகிஸ்தானின் அரசியல் கட்சியிடமிருந்தே, தனி பலூசிஸ்தான் வேண்டும் என்ற கோரிக்கை குறித்து வெளிப்படையான குரல் எழுந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவுக்கு எதிராகத் தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதாக பாகிஸ்தானுக்கு மேலாக நீண்ட காலமாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

**இன்னோர் பங்காளதேஷாக மாறுமா?**

தற்போது பலூசிஸ்தான் விவகாரத்தை இந்தியா முக்கிய துரும்புச் சீட்டாக கையிலெடுத்துள்ளது. பலூசிஸ்தானை, இன்னொரு வங்கதேசமாக பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று கோபத்தில் பாகிஸ்தானை கொந்தளிக்க வைத்துள்ளது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள பலூசிஸ்தானில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், அங்கு உரிமைகளுக்காக போராடும் தலைவர்களுக்கு இந்தியா ஆதரவு




அளிக்கும் என்றும் இந்திய மத்திய அரசு கூறியுள்ளது.

உண்மையிலேயே பலூசிஸ்தானை இன்னோரு பங்காளதேஷாக உருவாக்க முடியுமா என்றால், அது சாத்தியமில்லை என்றே கூறலாம். பங்காளதேஷ் போன்று, பலூசிஸ்தான் இந்திய எல்லையை ஒட்டி அமைந்திருக்கவில்லை. அதன் எல்லைப் பகுதிகள் பெரும்பாலும் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரானையொட்டி அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் வழியாக போராட்டத்துக்கான உதவிகளை செய்யலாமே தவிர அது அவ்வளவு எளிதானது அல்ல. ஏனெனில் ஆப்கானிஸ்தானின் எல்லையையொட்டி அமைந்துள்ள இடங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் பலூசிஸ்தானின் பூர்வகுடி பழமைவாதிகள். அவர்கள் இந்தியாவுக்கு ஆதரவான மனநிலை கொண்டவர்கள் அல்ல என்பதும் உண்மையே.

ஆயினும் இன்னொரு பங்காளதேஷாக பலூசிஸ்தான் மாறுமா என்று இந்தியாவின் எச்சரிக்கையானது காஷ்மீரை பாகிஸ்தான் தூண்டினால், நாங்களும் பலூசிஸ்தானை தூண்டிவிடுவோம் என்பதை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளது.

**சீனாவுக்கும் தலைவலி?**

காஷ்மீர் எல்லையில் பதற்றம் அதிகரித்த நிலையில், பாகிஸ்தானில் பலூச் மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை கண்டு பாகிஸ்தான் இராணுவம் அச்சத்தில் உள்ள தாக்கவும் கூறப்படுகிறது. இது சீனாவுக்குத் தலைவலியை அதிகரித்துள்ளது.

ஏனென்றால், சீனா பலூசிஸ்தானில் லட்சக் கணக்கான டொலர்களை முதலீடு செய்துள்ளது. இந்த பகுதி சீன புறநகராக மாறி உள்ளது என்றே கூறலாம். இந்த பிராந்தியத்தில் இயற்கை வளங்கள் நிறைந்திருக்கின்றன.

தொடர்ச்சி▼







# பிரகடனப்படுத்திய பலூசிஸ்தான்!

**தொடர்ச்சி▼**

இங்கிருந்து கனிம வளங்களை பிரித்தெடுத்து, பாகிஸ் தானின் பஞ்சாப் மாநிலத்தை வளமாக்கி வரு கின்றனர். இதனால் பலூச் மக்கள் நெடுங்காலமாகவே பாகிஸ்தான் அரசை எதிர்த்து வருகின்றனர்.

அத்துடன் சீனாவுக்கு நிலங்களை தாரை வார்க்கும் பாகிஸ்தான் அரசின் செயலை எதிர்க்கும் பலூசிஸ் தானில் உள்ள மக்களை பாகிஸ்தான் உளவு அமைப் பான ஐ.எஸ்.ஐ. கடத்தப்படுகின்றனர். பின்னர் அவர்களின் சடலங்கள்தான் கிடைக்கின்றன. பாகிஸ் தான் ராணு வத்தின் இந்த மிருகத்தனமான நடவடிக்கைக்கு உள்ளூர் மக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆயினும் பலூசிஸ்தான் மாகா ணத்தில் உள்ள போராளிகள் பாகிஸ்தான் இராணுவத்தை தாக்கி பதிலடி கொடுத்து வருகின்றனர்.

**பலூசிஸ்தான்**
**தனிநாட்டு போராட்டம்**

1947 இல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தி யாவை பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால் உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூ ச்சி, பக்துான் என்று ஐந்து தேசிய இனங்களைக் கொண் டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971 இல் வங்காள தேசமாக மலர்ந்தது.

இராணுவ ஆட்சி, மக்களாட்சி என்று எதுவாயிருந்தா லும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூ ச்சிகளையும் பக்தூனியர்களையும் (பத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த் துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை கோரிப் போராடி வருகின்றன.

பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும் போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் (ஊீநுஊ) இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அந்த நாட்டில் மிகப்பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் அப்பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

**பலூசிஸ்தான் போராட்ட வரலாறு**

பிரிட்டீஷிடம் இருந்து 1947ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11 இல் பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதையடுத்து 1947, டிசெம்பர் 16 இல் அந்தப் பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாக பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப் பட்டது. ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன.

இந்த நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடும்பத்தினரைச் சிறை வைத்தது. அந்தப் பகுதியின் முழுக் கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது. எனவே 1948 ஆம் ஆண்டு முதல் அந்தப் பகுதி பாகிஸ்தானின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**மறைமுக இந்திய ஆதரவு**

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தி யர்கள் தார்மீக ஆதரவு செய்வதாக பலூசிஸ்தான் விடுதலை இயக்கமான 'ஹிந்த் பலூச்' எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறுகையில் பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோதிலும், 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீளவலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தியர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடை யாளம், கலாசாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரியாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும் புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டுவரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

**பலூசிஸ்தான் இனப்படுகொலை**

பலூசிஸ்தான் மக்கள் மீது தொடர்ந்தும் இனப் படுகொலை நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பகுதி முழுவதும் பாகிஸ்தான் ராணுவத்தின் அராஜகம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ராணுவத்தால் திடீரென நடத்தப்படும் குண்டுவெடிப்புகளால் நூற்றுக் கணக்கானோர் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர்.

இந்த நிலையில், பலூசிஸ்தானில் நடைபெறும் கொடுமைகளை, மக்கள் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் விதமாகவும், அதற்கு எதிரான மற்றும் தனிநாடு போராட்டங்களை தீவிரப்படுத்தி சர்வதேசமெங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான பலூ சிஸ்தான் மக்களின் சுதந்திர கோஷங்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன.

**சீனாவின் நட்புக்கரம்**

இப்போது பாகிஸ்தானிற்கு பலூச்சிஸ்தான் பிரச்சனை பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. பாகிஸ் தானில் உள்ள பலூசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாகப் பிரிக்கக் கோரும் இவர்களின் போராட்டத்தை நசுக்குவதில், சீனாவும் நட்புக்கரம் நீட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பலூசிஸ்தானில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கணிப்பில் 37 வீதமான மக்கள் தனி பலூசிஸ்தான் தனிநாடு கோரிக் கைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஆனால் பலூசிஸ்தானின் மோதல்களைத் தீர்க்க அரசியல் பேச்சுவார்த்தை மட்டுமே ஒரே வழி என்றும், பலூசிஸ்தானின் முக்கிய பிரச்சினைகள் அரசியல் மற்றும் பொருளாதாரம், பரஸ்பர புரிதல், சமரசம் மற்றும் பலூச்சின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தான் விவகாரத்தில் 3ஆம் தரப்புக்கு இடமில்லை

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டம்



பாகிஸ்தான் விவகாரத்தில் 3 ஆம் தரப்புக்கு இடமில்லை என்று மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக டில்லியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையவர்களுக்கு ஒபரேஷன் சிந்தூர் மூலம் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டு இருக்கிறது. பாகிஸ்தான் விவகாரத்தை பொறுத்தவரை இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது. இது இருதரப்பு விவகாரம். இதில் 3 ஆம் தரப்புக்கு இடமில்லை.

தீவிரவாதம் குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி ஏற்கெனவே தெளிவுபடுத்தி உள்ளார். இந்தியாவுக்கு எதிராக சதி வேலைகளில் ஈடுபட்ட தீவிரவாதிகள் பாகிஸ்தானில் பதுங்கி உள்ளனர். அவர்களின் பட்டியலை பாகிஸ்தானிடம் வழங்கி உள்ளோம். அந்த தீவிரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும்.

பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத முகாம்களை மூட வேண்டும். ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் வெளியேற வேண்டும். இது குறித்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம்."" என்றார்.

# மணிப்பூர் துப்பாக்கிச் சண்டையில் 10 தீவிரவாதிகள் உயிரிழப்பு

## ஏழு பேர் கைது



மணிப்பூரின் சந்தேல் மாவட்டத்தில் அசாம் ரைபிள்ஸ் படையுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் இராணுவத்தின் கிழக்கு படைப்பிரிவு வெளியிட்டுள்ள பதிவில்,

"இந்தியா – மியான்மர் எல்லைக்கு அருகில், மணிப்பூரின் சந்தேல் மாவட்டம், நியூ சாம்தால் கிராமத்தில் ஆயுதமேந்திய நபர்களின் நடமாட்டம் இருப்பதாக புதன்கிழமை உளவுத் தகவல்கள் கிடைத்தன. இதன் அடிப்படையில் அசாம் ரைபிள்ஸ் படையினர் அங்கு விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். சம்பவ இடத்தில் இருந்து கணிசமான அளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன." என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொஹிமாவில் உள்ள இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "அங்கு இராணுவ நடவடிக்கை தொடர்கிறது. அது முடிவுக்கு வந்தவுடன் அது தொடர்பான தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படும்." என்றார்.

இதற்கிடையில் மணிப்பூரில் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 7 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

தவுபால், காக்சிங், விஷ்ணுபூர், சூரசந்த்பூர் ஆகிய மாவட்டங்களில் இவர்கள் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் கூறினர். இவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

# காஷ்மீரில் துப்பாக்கி சண்டை; தீவிரவாதிகள் மூவர் பலி!



காஷ்மீரில் இடம்பெற்ற துப்பாக்கி சண்டையில் 3 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர். இவர்களுக்கு பஹல்காம் தாக்குதலில் தொடர்பு உள்ளதா என விசாரணை நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டம் அவந்திபோரா அருகே உள்ள நாதர் ட்ரால் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக உளவுத் துறைக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, இந்திய பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது மறைந்திருந்த தீவிரவாதிகள் இந்திய பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். பதிலுக்கு பாதுகாப்புப் படையினரும் துப்பாக்கியால் சுட்டனர். இரு தரப்புக்கும் இடையிலான துப்பாக்கிச் சண்டையில் 3 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த தீவிரவாதிகளை அடையாளம் காணும் பணி நடைபெற்றது. இதில் உயிரிழந்தவர்களின் பெயர் ஆசிப் அகமது ஷேக், அமிர் நசிர் வானி மற்றும் யவர் அகமது பட் ஆகியோர் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் ஆசிப் அகமது ஷேக் என்பவர் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டவர் என கூறப்படுகிறது. இதை உறுதிப்படுத்த பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இவர்கள் மூன்று பேரும் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

48 மணி நேரத்தில் நடைபெற்ற 2 ஆவது துப்பாக்கிச் சண்டை இது ஆகும். தெற்கு காஷ்மீரின் ஷோபியான் மாவட்டம் ஷுகால் கெல்லர் பகுதியில் உள்ள வனப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் 3 லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க பொருள்களுக்கான பூச்சியம் வரி பற்றி இறுதி முடிவு எடுக்கவில்லை என்கிறது இந்தியா



அமெரிக்க பொருள்கள் மீதான வரிகளை பூச்சியமாக குறைக்க இந்தியா முன்வந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய நிலையில், அதுகுறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக தோஹாவுக்கு சென்றுள்ள ட்ரம்ப் அங்குள்ள தொழிலதிபர்கள் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றார். அப்போது முதலாவதாக அப்பிள் நிறுவனம் அதன் ஐபோன் ஆலையை தோஹாவில் அமைப்பது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அதன் பிறகு ட்ரம்ப் கூறுகையில், “இந்தியாவில் பொருள்களை விற்பனை செய்வது மிகவும் கடினமாக இருந்தது. எனவே, அவர்கள் எங்களிடம் எந்த வரியும் வசூலிக்க தயாராக இல்லாத ஒரு ஒப்பந்தத்தை அமெரிக்காவிடம் வழங்கியுள்ளனர்” என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு கூறிய சில மணி நேரங்களில் இந்தியா சார்பில் இதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று கூறுகையில்,

“இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது மிகவும் சிக்கலான பேச்சுவார்த்தை. எனவே அதுகுறித்து இறுதி முடிவு எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. எந்த வொரு வர்த்தக ஒப்பந்தமும் பரஸ்பரம் பயனளிக்க வேண்டும். அதற்கான பணிகளில்தான் இருநாடுகளும் ஈடுபட்டுள்ளன.” என்றார்.

இதனிடையே காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், “அமெரிக்க ஜனாதிபதி பூச்சியம் வரி விதிப்பை இந்தியா ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கிறார். நமது பிரதமர் மோடி இந்த விவகாரத்தில் மௌனம் காக்கிறார். இதற்கும், சிந்தூர் ஒபரேஷன் நிறுத்தத்துக்கும் என்ன தொடர்பு?” என்று கேள்வி எழுப்பி உள்ளார்.

அமெரிக்காவின் நெருங்கிய வர்த்தக கூட்டாளியாக இந்தியா உள்ளது. மேலும், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பிலும் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானதாக உள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் சீனாவின் விரிவாக்கத்துக்கான எதிர்சமநிலையாகவும் இந்தியா உள்ளது.

# ஈரான் அணுசக்தித் திட்டம் தொடர்பில் டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை



ஈரானின் அணுசக்தி திட்டத்தைப் பொறுத்தவரை, புத்திசாலித்தனமான தீர்வு வேண்டுமா? அல்லது கொடூரத் தாக்குதல் வேண்டுமா? என்பதை அந்நாடே முடிவு செய்ய வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகின்றது. அத்துடன் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்தவில்லை என்றால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்றும்தொடர்ந்தும்ஈரானை எச்சரித்து வருகின்றது.

இந்நிலையில் கட்டாரின் தலைநகரான தோஹாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மன்னர் (அமிர்) தமீம் பின் ஹமாத் அல் தானியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து வணிகத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே ‘ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பாக ஒப்பந்தம் மேற்கொள்வது அல்லது வான்வழித் தாக்குதல்களை எதிர்கொள்வது என இரண்டு தீர்வுகள் மட்டுமே அந்நாட்டுக்கு உள்ள எனவும் பிரச்சினையை மிருகத்தனமான முறையில் அல்லாமல், புத்திசாலித்தனமான முறையில் தீர்க்கவே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானுக்கு துருக்கி வெளிப்படையான ஆதரவு



துருக்கி வெளிப்படையாக தனது ஆதரவை பாகிஸ்தானுக்கு தெரிவித்துள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் மூண்ட நிலையில், ஒபரேஷன் சிந்தூர் மூலம் பயங்கரவாத பகுதிகளை இந்தியா தாக்கியது.

அதற்கு பதில் தாக்குதல் நடத்த முயன்ற பாகிஸ்தானின் முயற்சிகளையும் தடுத்தது.

இந்நிலையில் இந்த போரில் பாகிஸ்தானுக்கு துருக்கி ட்ரோன் உள்ளிட்ட ஆயுதங்களை வழங்கி உதவி செய்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய வியாபாரிகள், துருக்கியுடனான பல வியாபாரங்களை நிறுத்தியுள்ளனர்.

ஆனால் அதை பற்றி கவலைப்படாத துருக்கி தனது பாகிஸ்தான் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இதுபற்றி அறிக்கைவெளியிட்ட துருக்கி ஜனாதிபதி எர்டோகன், “துருக்கி – பாகிஸ்தான் இடையேயான சகோதரத்துவம் உண்மையான நட்புக்கு சான்று.

உலகில் ஒரு சில நாடுகள் மட்டுமே இப்படி ஒரு நட்புறவைக் கொண்டிருக்கின்றன. துருக்கியை போலவே பாகிஸ்தானிலும் அமைதி, ஸ்திரத்தன்மை உருவாக விரும்புகிறோம். கடந்த காலங்களை போலவே எதிர் காலத்திலும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக நிற்போம்.” எனக் கூறியுள்ளார்.

பக்கங்கள் - 3

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 16/05/2025

## கனடாவில் புலம்பெயர்ந்த ஒருவர் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை



C2 ▶




# கனடா தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னத்தை ராஜபக் ஷக்கள் எதிர்ப்பது அதற்கு கிடைத்த கௌரவம்

## பிராம்ப்டன் மேயர் பெட்ரிக் பிரவுன் தெரிவிப்பு

கனடாவின் தமிழ் இனப்படு கொலை நினைவுச்சின்னத்தை ராஜபக்சர்கள் எதிர்ப்பது, அதற்கு கிடைத்த கௌரவத்தின் சின்னம் என பிராம்ப்டன் மேயர் பெட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் கணக்கில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் அவர் மேற்கண்ட விடயத்தை கூறியுள்ளார்.

ராஜபக்ஷக்கள்தமிழ்இனப்படு கொலை நினைவுச்சின்னத்தை எதிர்ப்பது, இந்தக் குடும்பத் தால் இழந்த அப்பாவி பொது மக்களை அங்கீகரித்து நாம் சரியான பாதையில் செல்கி றோம் என்பதற்கான உறுதியான சமிக்ஞை என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

C2 ▶



# கனடாவில் புலம்பெயர்ந்த ஒருவர் மர்ம நபர்களால் சுட்டுக்கொலை

இந்தியாவிலிருந்து 30 ஆண்டு களுக்கு முன் கனடாவுக்கு புலம் பெயர்ந்த ஒருவர், மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இந்தியாவின் பஞ்சாபைச் சேர்ந்த ஹர்ஜீத் சிங் (வயது 50), கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள ஆளைளளைளயரபய நகரில் ட்ரக் சேவை நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை தனது அலுவலகத்தின் அருகே நிறுத் தப்பட்டிருந்த தனது காரின் அருகே சிங் நின்றுகொண்டிருக்கும்போது,



அங்கு ஏற்கனவே கார் ஒன்றில் காத்தி ருந்த சிலர் அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவத்தைக் கண்ணால் கண்டவர்கள், அந்த நபர்கள் சிங்கை நோக்கி 15 முதல் 16 முறை சுட்டனர் என வும் பின்னர் தாங்கள் வந்த காரிலேயே தப்பியோடிவிட்டனர் என்றும் தெரிவித் துள்ளனர்.

படுகாயமடைந்த சிங் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயி ரிழந்துவிட்டார்.

இதற்கிடையில், சிங்குக்கு ஏற்க னவே கொலை மிரட்டல்கள் வந்துள்ளன என கூறப்படுகிறது. பொலிஸார் வழக்கு பதிவு செய்து கொலையாளிகளை தேடி வருகிறார்கள்.



# மிசிசாகா நெடுஞ்சாலை விபத்தில் ஒருவர் பலி

மிசிசாகா நெடுஞ்சாலையில் நடந்த விபத்தில் லொறி ஒன்றின் சாரதி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்டாரியோ மாகாண பொலிஸ ாரின் அதிகாரப்பூர்வ தகவலின்படி, மிசிசாகா நகரில் வியாழக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள் ளது.

இந்த லொறி விபத்து காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அபாயகரமான பொருள்களை ஏற்றிச் சென்ற வணிக லொறி கொன் கிரீட் தடுப்பு சுவரில் எதிர்பாராத விதமாக மோதியுள்ளது.

வாகனத்தில் சாரதி மட்டுமே தனியாக பயணித்துள்ளார் என தெரிவிக் கப்படுகிறது.

விபத்துக்கான சரியான காரணம் தற்போது வரை கண்டறியப்படவில்லை என்றும், இது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

## கனடா தமிழ்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு, இனப்படுகொலை எதுவும் நடக்கவில்லை என்று உறுதியாக இருந் தால், ராஜபக் ஷ குடும்பத்தினர் நீதி யைத் தடுத்து வழக்குத் தொடராமல் ஒளிந்து கொள்வதற்குப் பதிலாக சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத்துடன் முழு மையாக ஒத்துழைக்க வேண்டும் என்று மேயர் பெட்ரிக் பிரவுன் வலியுறுத்தி யுள்ளார்.

பொறுப்புக்கூறலை எதிர்கொள் வதற்குப் பதிலாக, இந்தக் குடும்பம் இலங்கை அரசால் பாதுகாக்கப்பட்ட ஆடம்பரத்தில் ஒளிந்து கொள்வதானது வெட்கக்கேடானது என்றும் அவர் அந்த பதிவில் விமர்சித்துள்ளார்.

அத்துடன், ராஜபக் ஷ குடும்பம் இழைத் துள்ள குற்றங்கள் போல்பொட், ஸ்லோப டான் மிலோசோவிக், ஹென்றிச் ஹிம்லர் மற்றும் புளிசியான் கபுகா ஆகியோர் இழைத்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுடன் போட்டியிடக் கூடியவை என்றும் பெட்ரிக் பிரவுன் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இந்த நிலையில், அவ்வாறான ஒரு குடும்பம் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னத்தை எதிர்ப்பது அதற்கு கிடைத்த கௌரவ சின்னம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் என்று அழைக்கப்படுவது, கனேடிய அரசாங்கத்தின் அரசியல் ரீதியாக இயக்கப்படும் நடவடிக்கையாகத் தெரிவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கூறியதை தொடர்ந்து பிராம்ப்டன் மேயரின் மேற்படி கருத்துகள் வெளியாகியுள்ளன.




# டொரொண்டோவில் விபத்து; தந்தையும் மகனும் மரணம்

கனடாவின் டொரொண்டோ நகரின் ஸ்கார்பரோ பகுதியில், மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் 11 வயது மகன் ஆகியோர் கார் மோதி உயிரிழந்த சோக சம்பவம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மோனிங்சைட் அவென்யூக்கு கிழக்கே உள்ள கிங்ஸ்டன் மற்றும் மான்ஸ் சாலைகள் சந்திக்கும் இடத்தில் இந்த விபத்து நடந்ததாக டொரொண்டோ பொலிஸாரும் உயிர்ப்பு படையினரும் தெரிவித்துள்ளனர்.

வெண்கல நிற கார் ஒன்றும் மோட்டர் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 47 வயதுடைய தந்தையும், அவரது 11 வயது மகனும் இந்த விபத்தில் கடுமையான காயங்களை அடைந்தனர்.

பின்னர் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த சிறுவன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் விசாரணை நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

# பிரிட்டிஷ் கொலம்பியாவின் லொத்தர் சீட்டு வெற்றியாளர்




பிரிட்டிஷ் கொலம்பியாவின் வரலாற்றில் இதுவரை பதிவான மிகப் பெரிய லொத்தர் சீட்டு வெற்றியின் அதிர்ஷ்டசாலியாக சர்ரி நகரைச் சேர்ந்த ஜஸ்டின் சிம்போரியோஸ் கடந்த வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளார்.

மே 9 அன்று நடைபெற்ற லொட்டோ மெக்ஸ் ஜாக்பொட் சீட்டிலுப்பில், எல்லா ஏழு எண்களையும் சரியாக பொருந்தி 80 மில்லியன் டொலர் பணப் பரிசு வென்றுள்ளார்.

இதற்கு முன்னர் இதே அளவு பரிசு இருமுறை வழங்கப்பட்டாலும், அவை இருவருக்குள் பகிர்ந்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அந்த நாளில் சென்ட்ரல் சிட்டி மாலில் உள்ள றுயடஅயசவ கடையில் பர்கர் செய்முறைப் பொருட்கள் வாங்கும்போதே சீட்டை வாங்கியதாகவும், அதே நாளில் அவரது மகளுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் குடும்பத்தினர் விரைவில் உறங்கியதாகவும் சிம்போரியோஸ் ஊடகவியலாளர் சந்திப்பில் கூறினார்.

ஒரு டார்ச் ஒளியின் உதவியுடன் சீட்டின் எண்களை சரிபார்த்தபோது உண்மைதான் தெரிய வந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

“நான் கத்தினேன், அழுதேன், விளக்கை எரிய விட்டேன் – மனைவி மறுபடியும் கோபப்பட்டாள்,” என்று சிம்போரியோஸ் நகைச்சுவையாக கூறியுள்ளார்.

ஷநம் வாழ்க்கை முழுவதும் மாறப்போகுது என்று தாம் கூறியதாகத் தெரிவித்துள்ளார். பணியை இராஜி னாமா செய்ததாகவும், குடும்பத்தினருக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போவதாகவும் சிம்போரியோஸ் தெரிவித்துள்ளார்.